**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**
**Uni5 பக்த விஜயம் - 23. ஸ்ரீசேனா**

---

இறைவனை உணர அடைய சாதியோ தொழிலோ தடை இல்லை. தூய அன்பே பக்தி.அதற்கு இறைவன் கட்டுப்படுவான்.யார் யாருக்கு வேண்டுமானாலும் தன் உயர்ந்த வாழ்க்கையால் குருவாக முடியும்.**நாம் செய்யும் தொழிலில் மிகவும் விழிப்புணர்வுடன் இருந்தால் அதன் மூலம் நம்முள் இருக்கும் ப்ரஹ்மத்தின் இயக்கத்தையும் உணர முடியும்.அதன் மூலம் பலருக்கும் மாற்றங்கள் கொணர முடியும்.**

முக்தி தரும் நகரங்களில் ஒன்றாகிய அவந்தி [மத்ய ப்ரதேஷ்]
அவ்வூரில் முடி திருத்தும் நாவிதர் தான் சேனா.
முடி அழகு ஆணவத்தின் அடையாளம். முடியைத் திருத்தும் பணியில் தன்னிடம் வருபவர்களுக்கு ஆன்மீக அறிவுரைகள் கூறியும் பாடியும் அவர் பணி செய்வார்.தினமும் ஸ்ரத்தையுடன் பாண்டுரங்கனை சாலக்ராமத்தில் ஆவாஹனம் செய்து பூஜிப்பார்.

அரசனுக்கு முடி திருத்திய பாண்டுரங்கன்
அன்று அரசனுக்கும் அவனது சில உறவுகளுக்கும் சில காரியங்களுக்காக விரைவில் முடிதிருத்தம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. சேனாவை அழைத்து வரச் சொல்லி ஆள் அனுப்பினார்.ஆனால் அச்சமயம் அவர் பூஜையில் ஆழ்ந்து த்யானத்தில் லயித்த காரணத்தால் இவரது மனைவி பூஜையில் இருந்து வந்ததும் வருவதாகக் கூறி அனுப்ப, அதை ஏற்றுக் கொள்ள மன்னால் முடியவில்லை.

தன் பதவி அளித்த கர்வம் தலைக்கு ஏற, மன்னன் அவரைத் தண்டிக்க மீண்டும் அழைத்து வர வீரர் ஒருவரை அனுப்ப அவரே அவசர அவசரமாக அரண்மனைக்கு வந்தார்.மன்னனிடம் மன்னிப்பும் கேட்டுக் கொண்ட போதும் மன்னனின் கோபம் அடங்கவில்லை.

”நீர் என்ன பெரிய பாகவதரோ? பூஜைக் காலம் தவற மாட்டீரோ?” - மன்னன்

”ராஜ! அடியேன் சதா பூஜையில் இருக்கிறேன். இப்போது கூட உங்களுக்குச் செய்யும் பணியும் பூஜை தானே?” - சேனா

பேச்சை வளர்க்க விரும்பாத மன்னன் முடித்திருத்தம் செய்து கொள்ள அமர்கிறான்.முதலில் தலையில் தைலம் தேய்த்துக் கொண்டு சற்றும் மசாஜ்

செய்யும் போது சுகமாய்க் கண் மூடிய அரசன் கண் விழித்த போது கிண்ணத்தில் இருந்த தைலத்துள் பாண்டுரங்கனின் ப்ரதிபிம்மம் தனக்குத் தைலம் தேய்ப்பதைக் கண்டு அரண்டு கத்தி எழுந்து விட்டான்.

"ராஜ! அடியேன் தவறு ஏதும் செய்தேனோ? மன்னியுங்கள்!" - சேனா

"பாகவத உத்தமரே! நீ உண்மையில் என் கர்வமான முடியைத் திருத்தி என்னையும் மாற்றிவிட்டீர்! என்னே அதிஅத்புத திவ்ய தரிசனமாய் இறைவன் உன்னுள் இருப்பதைத் தைலத்துள் கண்டேன்! ஐயா! எமக்கும் உன் ஆன்மீக வழியை உணர்த்துக!" என்று சரண் புகுந்தான்.

தூய அன்பருள் இறைவன் மிளிரத் தொடங்குவான் என்பதை மன்னன் புரிந்து கொண்டான்.அவந்தி புரிக்குத் தான் அரசன் ஆன காரணமே தன்னுள் இருக்கும் ப்ரஹ்மத்தை உணர்ந்து அதன் மூலம் வீடு பேற்றினை அடையத்தான் என்றும் தெளிந்தான்.

ஹரி ஓம்!